www.tamilarangam.net


# சிங்கள இனவெறிக்குத்
# தீனியான தியாகிகள்!

## 1. சண்முகநாதன் சத்தியதேவன்

*(பிறந்த நாள் 13-9-1965)*

பலாலி வீதி — திருநெல்வேலி — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், தாயாருடனும் நான்கு சகோதரர்களுடனும் வாழ்ந்து வந்தார்.

24-7-83 பிற்பகல் 4.30 மணியளவில் இராணுவத்தினர் இவரது வீட்டுக்கு வந்து குடும்பத்தினர் முன்னிலையில் சுட்டுக் கொன்றனர்.




## 2. கந்தசாமி மயில்வாகனம்

*(பிறந்த நாள் 29-5-1938)*

இவர் யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்தவர். இரு குழந்தைகட்குத் தந்தை. இவரது இரு சகோதரர்கள் இவர் பொறுப்பிலேயே வாழ்ந்து வந்தனர்.

24-7-83 அன்று தொழில்நிலையம் சென்றவர் வீடு திரும்பவில்லை. மானிப்பாய்ச் சந்தைக்கு முன்னால் கொலைசெய்யப்பட்ட நிலையில் இவரது உடல் மீட்கப்பட்டது. இராணுவமே இவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதற்குச் சாட்சியங்கள் உள்ளன.

## 3. மகாதேவா இராசகாந்தன்

*(பிறந்த நாள் 26-3-64)*

சண்டிலிப்பாய் வடக்கு — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் 10ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்.

24-7-83 அன்று காலை 5.30 மணிக்குத் தனியார் கல்விநிலையத்திற்குப் படிக்கச் சென்றபோது இராணுவத்தினர் இவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 4. கணபதிப்பிள்ளை இராமையா (வேந்தன்)

*(பிறந்த நாள் 3 - 9 - 1942)*

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணம் செய்யும் போது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின ரால் இறக்கிச் சுடப்பட்டுத் தெருவில் எறியப் பட்டுக் கிடந்த இவரது சடலம் உறவினர் களால் மீட்கப்பட்டுத் தகனம் செய்யப் பட்டது.

இவர் யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு என்னும் இடத்தைச் சார்ந்தவர். இரு குழந்தைகட்குத் தந்தை.

## 5. சின்னையா சிவானந்தன்

*(பிறந்த நாள் 13 - 2 - 1943)*

பலாலி சாலை - திருநெல்வேலி —யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இவர், 'ரதி வாச்' நிறுவன முகாமையாளராகக் கடமையாற்றி வந்தார்.

24 - 7 - 83 பிற்பகல் 4- 30 மணியளவில் இராணுவத்தினரால் சுடப்பட்டு இறந்தார். வீட்டுக்குள் இராணுவம் புகுந்து இவரை வெளியே இழுத்துச் சுட்டுத்தள்ளியது.

மூன்று குழந்தைகட்குத் தந்தையாகிய இவரது இழப்பால் குடும்பம் நிர்க்கதியாகி யுள்ளது.

## 6. கனகபாதசுந்தரம் சுந்தர வதனன்

*(பிறந்த நாள் 4 - 5 - 1964)*

இவர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யைச் சார்ந்தவர். 19 வயதான இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர் வகுப்பு மாணவர். இவருடன் உடன்பிறப்புகள் மூவர்.

24 - 7 - 83 அதிகாலை தனியார் பள்ளிக்குச் சென்றவர் மீளவே இல்லை. நண் பகல் இராணுவத்தால் சுடப்பட்டு இறந்த செய்தி கிடைத்துள்ளது. பள்ளிக்குச் செல் லும் வழியிலேயே சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

---

**ஊரார் உழைப்பைக் கொள்ளை கொள்ளாமல் எவனும் பணக்காரன் ஆக முடியாது.**

— தந்தை பெரியார்

## துப்பாக்கியால் சுட்டுக்கொலை!



அண்மையில் இலங்கையில் நடைபெற்ற கலவரத்தின்போது இராணுவத்தரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் படம்.

வீடுகளில் புகுந்தும், தெருக்களில் வாகனங்களிலிருந்து இறக்கியும் இளைஞர்களை இராணுவத்தினர் குருவி சுடுவதுபோலச் சுட்டுக் கொன்றுள்ளனர். இறந்த பல நூறு இளைஞர்களில் இவர்கள் இருவர். இவர்களின் உடல்கள் தெருக்களில் வீசி எறியப்பட்டுக் கிடந்தன.

---

## திருகோணமலையில் இராணுவம் தீ வைத்தது

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது திருகோணமலையில் ஒரு பேருந்தில் பயணம் செய்த தமிழர்களைப் பெட்ரோல் ஊற்றித் தீவைத்தனர். அவ்வேளை பலர் உடல்கருகி இறந்துபோயினர். சிலர் தீக் காயங்களுடன் தப்பித் திருகோணமலை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இவ்வாறான தீ வைப்புகள் திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் நடைபெற்று உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்